கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 114/2023

வாதி தரப்பு சாட்சி – 1 ரெங்கம்மாள் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 23.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனது கணவருடன் சேர்ந்து நான் ஏதேனும் புகைப்படம் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவருக்கும் எனக்கும் திருமணம் நடந்ததாக காண்பிப்பதற்கு எழுத்து மூலமான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனது கணவரின் இறப்பு சான்றிதழ் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த போதோ, எனது முதல் விசாரணையின் போதோ எனது ஆதார் அடையாள அட்டையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. எனது ஆதார் அடையாள அட்டையை பார்த்தால் எனது குடியிருப்பு விவரங்கள் தெரிய வரும் என்றால் சரிதான். இன்று இந்நீதிமன்றத்திற்கு எதில் வந்தேன் என்றால் காரில் வந்தேன். யாருடன் வந்தேன் என்றால் எனது பேரன் அழைத்து வந்தார். ஊரில் எனக்கு சொந்தமாக காடு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி காடு எனது மகன்கள் மூன்று நபர்களின் பெயரில் உள்ளது. எனது வீட்டிலிருந்து மேற்படி காட்டிற்கு தினமும் சென்று வருவது வழக்கம் என்றால் சரிதான். என்னுடைய காரியங்களை நானே பார்த்துக் கொள்கிறேன் என்றால் சரிதான். எனது கணவர் இறந்த பிறகு தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனது பெயரில் தான் இருந்தது.

3. மேற்படி பட்டா எனது பெயரில் இருந்ததற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஒரு பெண் இருந்தாக சொல்லியுள்ள நிலையில் அவர் எப்போது இறந்தார் என்றால் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இறந்தார். 2002ம் வருடம் நானும், கருப்பாயியும் ராமசாமிக்கு சொத்தை விற்றோமா என்றால் இல்லை.

தாவா சொத்தின் மூல பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. 2 முதல் 4 வாதிகளிடம் தாவா சொத்தின் மூல பத்திரத்தை ஒப்படைத்தேனா என்றால் ஆமாம். நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், தாவா சொத்தின் மூல பத்திரம் 2002ம் வருடத்திற்கு யாரிடமும் இல்லை என்றும், யாரிடமும் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதி ராமசாமி என்பவர் சார்பதிவாளரிடம் மனு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் 2 முதல் 4 வாதிகளுக்கு 2012ம் வருடம் நான் எழுதி கொடுத்த பத்திரம் செல்லாது என்று நீக்கறவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் 35 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்ட நிலையில், அவர் இறப்பிற்கு பின்னிட்டு கடந்த 2012 வருடம் வரை என்னிடம் தாவா சொத்தின் சுவாதீனம் இருந்தது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2002ம் வருடம் பிரதிவாதி ராமசாமி தாவா சொத்தை கிரையம் பெற்ற தேதியிலிருந்து தற்போது வரை அதன் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்து நன்செய் நிலமா, புன்செய் நிலமா அல்லது தரிசா என்றால் புன்செய் நிலமாகும். தாவா சொத்தில் எனது கணவர் இறந்த பின்பு தாவா சொத்தில் நான் சாகுபடி செய்தேனா என்றால் செய்தேன். என்ன சாகுபடி செய்தேன் என்றால் சோளம், கம்பு, துவரை போன்றவை சாகுபடி செய்தேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அவ்வாறு நான் சாகுபடி செய்திருந்தால் அவற்றிற்கான சாகுபடி அடங்கல் கணக்குகளை சரிவர என் பெயரில் அரசாங்கத்தில் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் உரிமை அனுபவம் மற்றும் சுவாதீனம் ஆகியவை 2002ம் வருடம் முதல் பிரதிவாதி வசம் இருந்து வரும் நிலையில் தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இருப்பதாக இவ்வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

6. நான் 2 முதல் 4 வாதிகளுக்காக சாட்சிமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஏற்கனவே பிரதிவாதிக்கு கடந்த 2002ம் வருடம்

தாவா சொத்தை எழுதி கொடுத்ததாலும், அதன் பின்னர் கடந்த 2012 ம் வருடம் எனது மகன்களுக்கு எழுதி கொடுத்த பத்திரம் செல்லத்தக்கதல்ல இல்லாநிலையாகியுள்ளதாலும், இவ்வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் உரிமையாளர் பிரதிவாதி தான் என்பதை எனக்கு எப்போது தெரியவந்ததாக இவ்வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் நியாபகமில்லை.

7. இவ்வழக்கிற்காக விவரங்களை வழக்கறஞரிடம் யார் சொன்னது என்றால் நான் கூறவில்லை. நான் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றம், அதன்படி எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்க அருகதை இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Sd/-A.Yughathymariya**
**Additional District Munsif,**
**Kulithalai.**